# கீரிமலை பிரதேசத்தில் காணப்படும் மரபுரிமை சின்னங்கள் பற்றிய வாய்மொழி வரலாற்றுக் கதைகள் ஓர் ஆய்வு

**கேசினி, தெ., சிவரூபி, ச.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tkesini97@gmail.com

*தென்னாசியாவில் தெற்கு பகுதியில் சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத் தீவின் வட மாகாணத்தில் பாசுபத சமயத்தின் எச்சங்களைக் கொண்ட கீரிமலை நகுலஸ்வரர் ஆலயம் கடற்கரையுடன் அமைந்து காணப்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட சித்தர்களின் ஜீவ சமாதிகளின் இருப்பிடங்களாகவும் இப்பிரதேசமானது காணப்படுகின்றது. இப் பிரதேசத்தையொட்டி கீரிமலை பிரதேச மரபுரிமை சின்னங்கள் தொடர்பான வாய்மொழி வரலாற்று கதைகள் பற்றிய ஆய்வாக இது அமைகின்றது. இவ்வாய்க்குரிய பிரச்சனையானது இப்பகுதியில் காணப்படுகின்ற மரபுரிமை சின்னங்கள் அழிவடைந்து வருவதுடன் தொன்மைமிக்க அப்பிரதேசத்தின் வரலாற்றுத்தொன்மை, மரபுரிமைகள், அவற்றின் முக்கியத்துவம் என்பன முறையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதாகும். இதனடிப்படையில் இப்பிரதேசத்தின் தொன்மையினை பிரதிபலிக்கும் வாய்மொழி கதைகளினையும், ஏனைய மரபுரிமைகளினையும் ஆவணப்படுத்துவதும், இப்பிரதேசத்தில் காணப்பட்ட அரச கட்டிடங்கள், விவசாய நிலங்கள், துறைமுகங்கள், மலைக் கோயில், கிருஸ்ணன் கோவில், சடையம்மா மடம், கவுணாவத்தை வேள்வி வைரவர் ஆலயம், என்பனவற்றின் தற்போதைய நிலையினையும், அதன் வரலாற்றினையும் வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும். அத்துடன் இப்பிரதேசத்தில் உள்ள இந்துக்களின் பாரம்பரிய தலங்கள் பற்றிய தெளிவினை நிகழ்கால சந்ததியினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் வெளிப்படுத்தல் ஆய்வின் இன்னொரு நோக்கமாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்திற் குரிய பாரம்பரிய அடையாளங்களை பிரதிபலிக்கும் மரபுரிமைகள் அழிவடைந்து வருவத னால் அவற்றை இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்துவது அவசியமானதாகும். இவ்வாய் வினை மேற்கொள்வதற்கு முதல்நிலைத் தரவுகள் அவதானம் நேர்காணல் என்பவற்றின் மூலம் திரட்டப்பட்டன. மேலும் இரண்டாம் நிலை தரவுகளாக இவ்வாய்வு தலைப்புடன் தொடர்பு டைய நூல்கள் கட்டுரைகள் என்பன கொள்ளப்பட்டன. இவ்களஆய்வு, நேர்காணல் ஊடாக திரப்பட்ட முதல்நிலைத்தரவுகளை, இரண்டாம் நிலை தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட வாய்மொழி தகவல்கள் ஆய்வுக்கு ஊட்டமாக அமைந்தன. மக்களிடமிருந்து பெறப்பட்ட வாய் மொழி தகவல்கள் மூலம் அதிக அளவில் இப்பிரதேசத்தின் முக்கிய மரபுரிமைகள் இருக்க கூடும் என நம்பப்படுகிறது. இவை பற்றிய வரலாற்று நூல்களோ வரலாற்று கதைகளோ இல்லாத பட்சத்தில் இவ்வாறான வாய்மொழித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த மரபுரிமை சின்னங்கள் உடைய உண்மை தன்மையை நம்பக்கூடியதாக உள்ளது. இதனூடாக எதிர்காலத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்வதற்கும் இந்த இடங்களை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்வதற்கும் இந்த ஆய்வு ஒரு வாய்ப்பாக இருக்கும்.*

**திறவுச்சொற்கள் :** கீரிமலை, சடையம்மா மடம், வாய்மொழி கதைகள், நகுலேஸ்வரம்